குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.528/2025

அ.சா.2

2026–ம் ஆண்டு ஜுலை 07–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அமுதா | தொழில் | |
| கணவர் பெயர் | ரகுபதி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.19 மணி,

Accused A1)Andi, A2)Kumar, A3)Poongodi are present. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது தொளசம்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2022–ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த உதயபாஸ்கரன், அங்கமுத்து மற்றும் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த ஈஸ்வரன் ஆகியோரது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 03.06.2022–ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.உதயபாஸ்கரன் என்பவர் 17.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது அதற்கு முன்னதாக சேலம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் தலைமை காவலர் சிவக்குமார் என்பவர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாட்சி மதியழகன் என்பவர் நிலையம் வந்து ஆஜர் செய்த புகார் வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண்.123/2022 சட்டபிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்பு முதல் தகவல் அறிக்கையின் நகலினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அங்கமுத்து என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே 17.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்னதுரை மற்றும் மணிவாசகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

4. பின்பு சாட்சிகள் 1 முதல் 5 வரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு, வழக்கின் எதிரிகள் ஆண்டி, குமார் மற்றும் பூங்கொடி ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்பிணையில் சென்றதால் கைது செய்யப்படவில்லை. பின்பு வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் ஈஸ்வரன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

5. அவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவத்தில் காயமடைந்த சாட்சி மதியழகன் என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.தமயந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார்.

6. பின்பு சம்பவத்தில் காயமடைந்த சாட்சி மதியழகன் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து, முதலுதவி செய்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்து காயச்சான்று வழங்கிய ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

சிறப்பு உதவி ஆய்வாளர் அரிசியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கில் புலன் விசாரணை முடித்து சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளின் மீது நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

7. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள்



அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.48 மணி.**